

மந்திர ஆப்பிள்



அரேபிய நாட்டுப்புறக் கதை



முன்னொரு காலத்தில், மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த முதியவர் ஒருவர் தன் மூன்று மகன்களை அழைத்து தன் கடைசி விருப்பமாக " நீங்கள் அனைவரும் ஒரு பயணம் மேற்கொண்டு வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் செல்வத்தையும் தரும் ஒரு பொருளைக் கொண்டு வர வேண்டும்" என்று சொன்னார். சொல்லி முடித்தவுடன் அவர் உயிர் பிரிந்தது.



மூன்று சகோதரர்களும் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் தேடி வெவ்வேறு நாடுகளுக்குச் செல்வது என்றும் ஒரு வருடம் கழித்து மீண்டும் சந்திப்பது என்றும் முடிவு செய்து கொண்டார்கள்.




மூத்த மகன் சீனா செல்ல முடிவு செய்தான். அவன் சீனாவில் ஒரு பெரிய நகரத்தை அடைந்தபோது, அங்கே பல அபூர்வமான விஷயங்களைக் கண்டான்.



பல இடங்களில் வித்தைக்காரர்களையும்,
மந்திரவாதிகளையும் , கூத்தாடிகளையும் பார்த்தான்.



தெருக்களின் வழியாகச் செல்லும்போது ஒரு
விநோதமான சிறிய குள்ளன் ஒருவன் கையில்
அழகான கண்ணாடிக் குழாய் ஒன்றைக் கண்டான்.



' உங்கள் கையில் இருப்பது என்ன?" என்று அந்த குள்ளனிடம் கேட்டான். குள்ள மனிதர் " இது ஒரு மாயக் கண்ணாடி. தொலைதூரத்தில் நடப்பவற்றையும் இதில் தெளிவாக காணமுடியும் " என்றார்.



குள்ள மனிதர் அந்தக் கண்ணாடிக் குழாயை மூத்த மகனிடம் கொடுத்தார். வெகு தொலைவில் பயணம் செய்துகொண்டிருந்த சகோதரர்களைக்கூட அவனால் பார்க்க முடிந்தது. " என் தந்தை கனவு கண்ட, செல்வத்தையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய பொருள் இதுதான் என்று நினைக்கிறேன் " என்றான் மூத்த மகன்.



அந்த விசித்திரமான குள்ள மனிதர் அந்த அதிசய கண்ணாடிக் குழாயை மூத்த சகோதரனுக்குக் கொடுத்தார். மூத்த சகோதரன் அவருக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினான்.



இரண்டாவது மகன் ஒரு மத்திய கிழக்கு நாட்டிற்குச் சென்றான். பல நாட்கள் பிரயாணித்து ஒரு சிறிய கிராமத்தை அடைந்தான். அந்த கிராமத்தில், கம்பளங்களை விற்கும் ஒரு விநோதமான குள்ள மனிதனைக் கண்டான்.



இரண்டாவது மகன் அவரிடம், "பணக்காரனாகி, என் வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றைக் கண்டுபிடிப்பதே எனது தந்தையின் கனவு. அது நிறைவேற நீங்கள் எனக்கு உதவ முடியுமா? "என்று கேட்டான். அந்த நபர் சிரித்துக்கொண்டே, " பழைய கம்பளம் ஒன்று என்னிடம் உள்ளது. உங்களுக்கு பிடிக்குமா பாருங்கள் "என்று கூறினார்.



அந்தக் குள்ள மனிதர் புழுதி அடைந்து கிடந்த ஒரு கம்பளத்தை தூசி தட்டி எடுத்துக் காண்பித்தார். இரண்டாவது மகன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தக் கம்பளம் காற்றில் மிதக்க ஆரம்பித்தது.



"இது என்ன மாதிரியான கம்பளம்" என்று வியந்தான் இரண்டாவது மகன். அந்த நபர், "இது ஒரு பறக்கும் கம்பளம், அதில் உட்கார்ந்து நீங்கள் விரும்பும் இடத்திற்கு செல்லலாம். இது தான் உங்கள் தந்தை விரும்பிய பொருளோ " என்றார்.



"அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றான் இரண்டாவது மகன். "அப்படியானால் இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்று கொடுத்துவிட்டார் அந்த விநோதமான குள்ள மனிதர். இரண்டாவது சகோதரன் அவருக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினான்.




இளைய மகன் ஒரு ஆப்பிரிக்க நாட்டிற்கு பயணம் செய்தான். ஒரு நாள் அவன் அங்கு ஒரு குடிசைக்கு அருகில் முன் எப்போதும் , வேறெங்கும் பார்த்திராத ஒரு அழகான தங்கமயமான மரம் ஒன்றைப் பார்த்தான். அந்த மரத்தில் ஒரே ஒரு பழம் - ஒரு பளபளப்பான சிவப்பு ஆப்பிள் - மட்டுமே இருந்தது.



அந்த குடிசையிலிருந்து ஒரு விசித்திரமான குள்ள மனிதர் வெளியே வந்தார். அவர் இளைய சகோதரனிடம், "எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். இளைய மகன், ""பணக்காரனாகி, என் வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றைக் கண்டுபிடிப்பதே எனது தந்தையின் கனவு. இந்தப் பழம் அதற்கு உதவுமா? "என்று கேட்டான்.



"ஓ, இது மந்திர ஆப்பிள்" என்று அந்த விசித்திரமான குள்ள மனிதர் கூறினார். “இதன் சக்தி என்ன?” என்று இளைய மகன் கேட்டான். "நேரம் வரும்போது உனக்கே தெரியும்" என்று அந்த மனிதர் சொன்னார். இளைய சகோதரன் அந்த விசித்திரமான குள்ள மனிதரிடமிருந்து ஆப்பிளை வாங்கிக்கொண்டு வீட்டை நோக்கி திரும்பி நடந்தான்.



ஒரு வருடம் கழித்து மூன்று சகோதரர்களும் தங்கள் வீட்டிற்கு திரும்பி வந்தார்கள். அவரவர் தேடிக் கொண்டு வந்த பொருட்களை ஒருவருக்கொருவர் காட்டிக் கொண்டார்கள்.



மூத்த சகோதரன் தனது மந்திர கண்ணாடியை வெளியே எடுத்து அதன் வழியாகப் பார்த்தபோது, தூரத்து நாடு ஒன்றில் ஒரு இளவரசி மிகவும் நோய்வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பது தெரிந்தது.



இரண்டாவது சகோதரன், "நாம் என் பறக்கும் கம்பளத்தின் மீது ஏறிக் கொண்டு அந்த நாட்டிற்கு செல்லலாம்" என்றான்.



அவர்கள் கம்பளத்தின் மீது அமர்ந்து அந்த தொலைதூர நாட்டிற்கு பறந்து சென்றனர்.



“ எல்லா மருத்துவர்களுமே கைவிரித்து விட்டார்கள் “ என்று அரசர் மிகவும் கவலையுடன் தெரிவித்தார். இளவரசியை குணப்படுத்துபவருக்கு பாதி நாட்டையும் கொடுத்து இளவரசியையும் திருமணம் செய்து கொடுப்பதாக சொன்னார்.



இளைய சகோதரன் திடீரென்று தனது மந்திர ஆப்பிள் மெதுவாக சூடாகி ஒளிர்வதை பார்த்தான். "நான் உங்கள் மகளை குணமாக்க முடியும் என்று நினைக்கிறேன்," என்று சொன்னான்.



அரசர் சகோதரர்களை இளவரசியிடம் அழைத்து சென்றார். இளைய சகோதரன் ஆப்பிளை பாதியாக வெட்டினான். சொட்டிய ஆப்பிள் சாறை இளவரசியின் வாயில் ஊற்றினான்.



சில நிமிடங்களில் இளவரசி நன்றாக உணர்வு தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். அவள் குணமடைந்தாள்.



மன்னர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து மகளை அணைத்துக்கொண்டார் . பின்னர் அவர், “என் மகளின் உயிரைக் காப்பாற்றியவனே இளவரசியை மணந்து கொள்வான்” என்றார்.



சகோதரர்கள் ஒவ்வொருவரும் தாங்களே இளவரசியின் உயிரைக் காப்பாற்றியதாக வாக்குவாதம் செய்யத் தொடங்கினர்.

மூத்த சகோதரன், "என்னுடைய மாயக் கண்ணாடி இல்லையென்றால், இளவரசி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதே நமக்கு தெரிந்திருக்காது. என்னைத் தான் இளவரசி திருமணம் செய்து கொள்ள வேண்டும். " என்றான்



இரண்டாம் சகோதரன், "என்னுடைய மாய கம்பளம் இல்லாதிருந்தால், இளவரசியின் உயிரைக் காப்பாற்ற சரியான நேரத்தில் இங்கு வந்திருக்க முடியாது. என்னைத் தான் இளவரசி திருமணம் செய்து கொள்ள வேண்டும். " என்றான்

இளைய சகோதரன் சொன்னான் “என் மந்திர ஆப்பிள் தான் இளவரசியை குணப்படுத்தியது. என்னைத் தான் இளவரசி திருமணம் செய்து கொள்ள வேண்டும். ” அரசர் இளவரசி யாரை திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதை அவளே முடிவு செய்யும்படி கேட்டுக்கொண்டார்.



இளவரசி மூத்த சகோதரனிடம், "உங்களிடம் இன்னும் உங்கள் மந்திரக் கண்ணாடி இருக்கிறதா?" என்று கேட்க மூத்த சகோதரன், "ஆம், இளவரசி" என்றான்.
இளவரசி இரண்டாம் சகோதரனிடம் "உங்கள் பறக்கும் கம்பளம் இன்னும் இருக்கிறதா? " என்றாள். இரண்டாம் சகோதரன்," ஆம், இளவரசி" என்றான்.



இளவரசி இளைய சகோதரனிடம், "உங்களிடம் இன்னும் உங்கள் மந்திர ஆப்பிள் இருக்கிறதா?" என்றபோது அவன் சோகமாக "இருந்த ஆப்பிளை வெட்டித் தான் சாறு எடுத்துக் கொடுத்துவிட்டேன். என்னிடம் இப்போது எதுவும் இல்லை." என்றான் .



இளவரசி புன்னகையுடன் தன் தந்தையிடம், "என் உயிரைக் காப்பாற்ற தன்னிடம் இருந்த அனைத்தையும் கொடுத்த இளைய சகோதரனையே திருமணம் செய்து கொள்வேன் " என்றாள்.



இளவரசி இளைய சகோதரனை மணந்தாள். தம்பதிகள் இருவரும் மூத்த சகோதரர்கள் இருவரையும் தங்களுடனே தங்கும்படி வேண்டிக்கொண்டனர். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அந்த நாட்டில் ஆட்சி செய்யத் தொடங்கினர்.



சகோதரர்களின் தந்தையின் கனவு நனவாகியது.

முற்றும்